IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 248/2021

சாட்சி : PW1

பெயர் : சரவணன் தேதி: 03-10-2023

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பிரதிவாதி எனக்கு ரூ. 8,00,000/- பணம் தர வேண்டும். அந்த பணத்திற்கு ஆதரவாக கிரய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் ஆமாம். 24.06.2020 ல் நான் பணம் கொடுத்தேன். சீலநாய்க்கன்பட்டியில், ராமு தட்டச்சர் அலுவலகத்தில் வைத்து பணம் கொடுத்தேன். அவருடைய அலுவலகத்தில் வைத்து வா.த.சா.ஆ-A1 தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஆமாம். அவரும் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். தட்டச்சர் அலுவலகத்திற்கும், பத்திர பதிவு அலுவலகத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். வா.த.சா.ஆ-A1 பதிவு செய்யப்படவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A1 கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றும், அதனால் தான் அது பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சிமெண்ட் கடை வைத்துள்ளேன். என்னுடைய தகப்பனார் செம்பு பித்தளை கடை வைத்திருந்தார். என்னுடைய தகப்பனாரிடம் தான் கொடுக்கல் வாங்கல் பிரதிவாதி செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் தனியாக வசித்து வருகிறேன். பெற்றோர்களுடன் வசித்து வரவில்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/- A.M. ரவி,<br>
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>
சேலம்.